BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

சங்க இலக்கிய இசைக்கருவிகள் காட்டும் தொழில் நுட்பம்
Sanga Literary Musical Instruments Showing Technique

பி. சாலினி
முனைவர்பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீசாரதாமகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம் - 16,
P. Salini
Research Scholar, PG and Research Department of Tamil, Sri Sarada College for Women (Autonomous), Salem - 16, Tamil Nadu, India, 9952447124, saliniprabakaran15@gmail.com.

முனைவர் சா. பூங்கொடி,
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம் - 16,
தமிழ்நாடு, இந்தியா. 7402140976, poonganathan@gmail.com.
Dr. S.Poongodi
Assistant Professor, PG and Research Department of Tamil, Sri Sarada College for Women (A), Salem - 16, Tamil Nadu, India, 7402140976, poonganathan@gmail.com.

Abstract

Sangam literature comprises three art forms: literature, music, and drama, with music being the most prominent. Renowned for its ability to soothe and enhance focus, music is a regular indulgence for many. Psychiatrists frequently endorse soft music as a therapeutic tool for mental health patients, highlighting its mood-boosting effects. People from all walks of life, including laypersons and educated graduates, enjoy music as entertainment. During their leisure hours, the Sangam people gravitated towards various forms of entertainment, with music being their preferred choice. They favored listening to music played on specific types of musical instruments over unstructured songs. The instruments they used can be categorized as Tolkaruvi (percussion), Tulaikaruvi (wind instruments), Narambukaruvi (stringed instruments), Midatrukaruvi (vocalists), and Kanchakaruvi (gongs and cymbals). This study aims to investigate the techniques employed by the Sangam people in crafting these instruments.

Key words: Entertainment, Music, Instruments, Nathams, Jalra.

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியம் என்பது இயல், இசை, நாடகம் என்னும் மூன்று கலைப் பிரிவுகளில் அடங்கி நிற்கிறது. இதில் மையமாக இருப்பது இசைக் கலையாகும். இசை மனித மனங்களை அமைதியாக்கி ஒருமுகப் படுத்துவதில் முதன்மையிடத்தில் உள்ளது. அதனால்தான் மக்கள் பலரும் அதிக அளவில் இசையினை விரும்பிக் கேட்பதைக் காணமுடிகிறது. மனநல மருத்துவரும்கூட தன்னிடம் வரும் மன நோயாளிகளைக் குணப்படுத்த மெல்லிய இசை கேட்பதைப் பரிந்துரைக்கின்றனர். மேலும் இசை கேட்பது அவர்களின் மனநிலையில் மிகுந்த பலன் அளிப்பதாகக் கூறுகின்றனர். பாமர மக்கள் முதல் படித்த பட்டதாரி மக்கள் வரையிலும் இசை கேட்பதைத் தங்கள் பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். சங்க மக்கள் தங்கள் வாழ்வியலோடு இசையை இணைத்து வாழ்ந்துள்ளனர். உழைக்கும் நேரங்களில் தன் உழைப்பின் கடினம் தெரியாமல் இருக்க இசை என்னும் உத்தியைக் கையாண்டுள்ளனர். ஆடல், பாடல், கூத்து, விடுகதை, கதை கூறல் எனப் பல பொழுதுபோக்கு அம்சங்கள் இருந்தாலும் இசையே அவர்களின் பிரதான பொழுது போக்காக அமைந்தது. பாடல்களை வாய்ப்பாட்டு அமைப்பாக மட்டுமே அமைக்காமல் இசைக் கருவிகளைக்கொண்டு இசை அமைத்துக் கேட்டுமகிழ்ந்தனர். இசைக்கருவிகள் தோல், துளை, நரம்பு, கஞ்சக் கருவிகள் எனும் நான்கு வகைகளில் உருவாக்கப்பட்டது. இத்தகைய இசைக் கருவிகளை உருவாக்குவதில் சங்க மக்கள் பயன்படுத்திய தொழில் நுட்பங்களைப் பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள் : பொழுது போக்கு, இசை, வாத்தியம், நாதங்கள், ஜால்ரா.

முன்னுரை

இசை மனித மனங்கள் சோர்ந்து போகாமல் புத்துணர்ச்சியாக வைத்துக்கொள்ள உதவும் ஒரு மாமருந்தாகும். இசை மகிழ்ச்சி, துக்கம், சிரிப்பு, அழுகை எனும் மக்களின் ஒவ்வொரு உணர்விலும் துணையாக இருக்கிறது. இதைப்போன்றே குழந்தையின் பிறப்பு முதல் இறப்புவரை அதாவது, பிறப்பு, திருமணம், பெயர் சூட்டுவிழா, சடங்குவிழா, திருவிழா, திருமணம், வளைகாப்பு, இறப்பு என மனித வாழ்வின் அனைத்து வளர்ச்சிப் படிநிலைகளிலும் இசை தவிர்க்க முடியாத இடத்தினைப் பெற்றுள்ளது. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாளம் எனும் ஏழு குறியீடுகளைக்கொண்டு இசை அமைக்கப்படுகிறது. இந்த குறியீடுகள் சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும் ஏழு ஸ்வரங்களையும், ச, ரி, க, ம, ப, த, நி, என்னும் ஏழு இசை ஒலிகளையும் கொண்டுள்ளது. ஒரு மொழியின் பேச்சு வடிவமாகவும், எழுத்து வடிவமாகவும் அமையக்கூடிய வரி வடிவத்தினைப் பண் அமைத்து பாடுவதே இசையாகும். இன்றைய நவீன இணைய உலகில் அனைவரது இணைய தேடலில் முதலிடத்தில் இருப்பது இசை பற்றிய காணொளிகளே. நவீன உலகில் மக்கள் தங்கள் காலத்திற்கு ஏற்ப இசைக் கருவிகளின் பயன்பாட்டில் புதுமைகளைப் புகுத்தி மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டனர். இத்தகைய சிறப்புகள் நிறைந்த இசையை தருகின்ற இசைக் கருவிகளை உருவாக்குவதில் சங்க மக்கள் பயன்படுத்திய தொழில் நுட்பங்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இசையின் வரலாறு

தமிழர்களின் வாழ்வில் இசை என்பது பழங்காலம் தொட்டு பல்வேறு தலைமுறைகள் கடந்தும் தொடர்ந்து வருகின்ற உணர்வு ஆகும். பிறந்த குழந்தைக்குப் பாடும் தாலாட்டு முதற்கொண்டு இறந்தவருக்குப் பாடும் ஒப்பாரி வரையிலும் இசை உடன்; வருகின்றது. பண்டைய தமிழர் இசைக்கு முன்னுரிமை கொடுத்து இசைக்கலையை வளர்த்து வந்தனர். பண்டைப் பண் இசை, செவ்வியல் தமிழ் இசை, பக்தி இசை, நாட்டார்இசை, திரையிசை, சொல்லிசை எனப் பல வடிவங்களில் இசை உள்ளது.

இந்த இசைப் பண்கள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழிசையாக உள்ளன. இந்த ஏழிசைகளும் நம் உடலின் உறுப்புக்களான மிடறு, நா, அண்ணம், சிரம், நெற்றி, நெஞ்சு, மூக்கு முதலிய இடங்களிலிருந்து பிறக்கின்றன. இதனை, *"மிடற்றினால் குரலும், நாவினால் துத்தமும், அண்ணத்தால் கைக்கிளையும், சிரத்தால் உழையும், நெற்றியால் இளியும், நெஞ்சினால் விளரியும், மூக்கால் தாரமும் பிறக்கும்"*[1] என்று தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் என்னும் நூலில் மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் சங்க மக்கள் இசைக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்த விதத்தினை மக்கள் எழுதிய வாய்மொழி இலக்கியங்கள், தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், இசை பற்றிய ஆய்வுகள், அயல் நாட்டார் குறிப்புகள் மூலமாக அறியலாம். மேலும் தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம், எட்டுத்தொகை நூல்களான பரிபாடல், புறநானூறு, அகநானூறு மட்டுமின்றி பத்துப்பாட்டு நூல்களும் இசை பற்றிய குறிப்புகளைக் கூறுகின்றன. இவற்றுடன் பெருநாரை, பெருங்குருகு, பேரிசை, சிற்றிசை, இசை நுணுக்கம், பஞ்சமரபு போன்ற தற்போது கிடைக்க இயலாத முதற் சங்கத்தில் வெளியிடப்பட்ட இசை நூல்களில் இசை பற்றிய செறிந்த கருத்துக்கள் கிடைக்கின்றன.

மேலும், *"இசைத் தொடர்பான பழமையான கல்வெட்டுக்கள் ஈரோடு அரச்சலூரை யடுத்த நாகமலை ஆண்டிப்பாறையில் கிடைத்துள்ளன"*[2] என்ற செய்தியினை முனைவர். எஃப். பாக்யமேரியின் காலந்தோறும் தமிழர் கலைகள் என்ற நூலின்வழி அறியமுடிகிறது. இவ்வாறாகத் தமிழ் மன்னர்களால் போற்றி வளர்க்கப்பட்டத் தமிழ் இசைக் கலையானது, சமணர்கள் வருகையினால் நலிவடையத் தொடங்கியது. சமணர்கள் இசையை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தாமல் இருந்தனர். தமிழில் மொத்தம் 103 பண்கள் தொகுக்கப்பட்டு உள்ளன. இதில், குறிஞ்சி யாழ், மருத யாழ், நெய்தல் யாழ் என்பன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பண்கள் ஆகும். இசையைப் பற்றி அறிந்திருந்த சங்க மக்கள் இசைக் கருவிகளைப் பற்றியும் அறிந்திருந்தனர்.

இசையை உண்டாக்கக்கூடிய இசைக் கருவிகளை, தோல் கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக் கருவிகள் என நான்கு வகைகளாகப் பிரிப்பர். இவ்வகைப்பாட்டிலேயே இசைக் கருவிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் என்ற நூலில், *"மிடறு (கழுத்து)"*[3] எனும் ஓசையையும் இணைத்து இசைக் கருவிகளை ஐந்து என்பார் மயிலை. சீனி. வேங்கடசாமி.

இசை என்பதற்கு, *"வசப் படுத்துவது"*[4] எனப் பொருள் கொள்ளலாம் என சு.வித்தியானந்தன் அவர்கள் தனது தமிழர் சால்பு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும், தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் இசை என்பதற்கு இசைப்பு என்று பொருள் கூறுகிறது. இதனை,

"இசைப் பிசையாகும்"[5]

என்கிறது. இதன் மூலம் இசை என்பது தொல்காப்பியர் காலத்தில் இசைப்பு என்னும் பொருளில் வழங்கப்பட்டதை அறியலாம். மேலும், இசை அசையும், சீரும் பண் அமைத்து ஓசையோடு சேர்த்துப் பாடப்படுவது என்பதை,

"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே"[6]

என்கிறார் தொல்காப்பியர்.

இசைக் கருவிகளின் வகைகள்

இசை ஒலிப்பு முறைகளுக்கு ஏற்ப பல்வேறு இசைக் கருவிகளை சங்க மக்கள் பயன்படுத்தியுள்ளனர். சங்க இலக்கியங்களில் இசைக்கருவிகளை இயம் என வழங்கியுள்ளனர். இதனை, *"இசைக்கருவி இயம் எனப்பட்டது"*[7] என்று சங்ககால வாழ்வியல் என்னும் நூலில் டாக்டர். ந.சுப்ரமணியன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். கார்ப் பருவத்தில் வையையில் வரும் நீர்ப் பெருக்கில் நீராடி மகிழும் மக்கள் அங்கு பல்வேறு இசைக்கருவிகளையும் இசைத்து மகிழும் காட்சியை,

"ஒத்த குழலின் ஒலி எழ, முழவு இமிழ்,
மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி,
ஒத்து அளந்து, சீர்தூக்கி; ஒருவர் பிற்படார்."[8]

என பரிபாடல் காட்சிப்படுத்துகிறது. இதன் மூலம் சங்க மக்களின் மகிழ்ச்சியில் இசைக்கருவிகள் பெரும் பங்கு வகிப்பதை அறியமுடிகிறது.

மேலும், தொல்காப்பியரும் அகத்திணைக்குரிய கருப்பொருள்களைப் பற்றிக் கூறுகையில் யாழ், பறை என்ற இருவகையான இசைக்கருவிகளைப் பற்றிக் கூறுவதை,

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் மொழிப"[9]

என்னும் நூற்பாவின் வழி அறியலாம். இந்நூற்பாவின் மூலம் இசைக்கருவிகளைப் பற்றித் தொல்காப்பியர் கூறுவதைப் பற்றியும் அறியலாம். இவை மட்டுமின்றி,

"திண்வார் விசித்த முழவோடு ஆகுளி
நுண்ணுருக்கு உற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி அணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை வகுத்த களிற்றுயிர்த் தூம்பின்
இளிப்பயிர் இமிரும் குறும்பறந்தூம் பொடு
விளிப்பது கவரும் தீங்குழல் துதை
நடுவுநின்று இசைக்கும் அரிக்குரல் தட்டை
கடிகவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி
நொடி தருபாயணியப தலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர்
கடுப்ப நேர்சீர்சுருக்கிய காயக் கலப்பையிர்"[10]

எனும் பாடலில் முழவு, ஆகுளி, கோடு, தூம்பு, புல்லாங்குழல், தட்டை, அரி, எல்லரி, பதலை எனப் பல்வேறு வகையான இசைக்கருவிகளைப் பற்றி மலைபடுகடாம் கூறுகிறது.

சங்க இலக்கியங்கள் பல்வேறு இசைக்கருவிகளைப் பற்றிக் கூறினாலும் இந்த இசைக்கருவிகள் யாவும் அவற்றின் தயாரிப்பு முறையைக் கொண்டு,

- தோல் கருவிகள்
- துளைக் கருவிகள்
- நரம்புக் கருவிகள்
- கஞ்சக் கருவிகள்

என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தோல் கருவிகள்

இறந்துபோன விலங்குகளின் தோல்களைக் கொண்டு தயாரிக்கப்படும் இசைக்கருவிகள் தோல் கருவிகள் எனப்படும். இவ்வகை இசைக் கருவிகள் மரம் அல்லது உலோகங்களைக்கொண்டு உருளை அல்லது வட்ட வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இதன் ஒரு பக்கம் அல்லது இரண்டு பக்கங்களிலும் விலங்குகளின் தோலினைக்கொண்டு நன்றாக இறுக்கமாக இணைத்துக் கட்டப்பட்டிருக்கும்.

தோல் கருவிகள் உருவாக்கத்தில் இறந்த விலங்குகளின் தோலினை சரியான முறையில் சுத்தம்செய்து, வெயிலில் காயவைத்து, முறையாகப் பதப்படுத்தி கருவிகள் செய்கின்றனர். அவ்வாறு செய்யும்போதும், இசையின் ஒலிப்பு முறைக்கேற்றவாறு இழுத்துக்கட்டுவர். இதனுடைய ஒரு திறப்பின்மீது நீட்டிக்கப்பட்ட தோலின் சவ்வினை அடிப்பதன் மூலம் ஒலி எழுப்புகிறது. முரசு, பறை, பேரிகை, உடுக்கை, மத்தளம், காடிகை, தண்ணுமை, திமிலை, முழவு போன்றவை மக்களால் அதிகம் பயன்படுத்தப்பட்ட தோல் கருவிகளாகும். மேலும், *"தெண் கிணை"*[11] என்னும் கருவி பற்றியும் தமிழ் இசை இலக்கிய வரலாறு என்னும் நூலில் மு. அருணாச்சலம் என்பவர் எடுத்துக்காட்டியுள்ளார். இவற்றினுள் முழவு என்னும் கருவியே மக்களிடம் முதன்மை பெற்றிருந்தது. முனைவர். எஃப். பாக்யமேரி அவர்கள் தனது காலம்தோறும் தமிழர் கலைகள் என்னும் நூலில் முழவு பற்றிக் கூறுகையில், *"ஆடவரின் திரண்ட தோளுக்கு இது உவமையாகக் கூறப்பட்டது. திண்ணியவாரால் விசித்துக் கட்டப்பட்டது. இதன் ஒரு புறத்தில் ஒரு வகை மண் அமைக்கப்படும்"*[12] என்கிறார்.

தண்ணுமை

தண்ணுமை என்பது கிளிகளை விரட்டுவதற்காகவும், கோயில் திருவிழாக்களின் போதும், தெய்வ அழைப்பின் போதும், பயிர்களை அறுவடை செய்யும்போதும் அடிக்கப்படுகிறது. சங்க மக்கள் வயலில் நெல் அறுப்பின்போது தண்ணுமை என்னும் இசைக்கருவியை இசைத்ததனை,

"வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇ"[13]

என்னும் புறநானூறு பாடல் வரியின் மூலம் அறியலாம். நெற்கதிரின் வாசனையை முகர்ந்து வனவிலங்குகள் எதுவும் வயலினுள் நுழைந்து விடாமல் இருப்பதற்காக இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன.

மேலும், போருக்காக மன்னன் தனது அடையாளப்பூவைச் சூடும் நன்னாளான பூக்கோள் நாளின் கொண்டாட்டத்தின்போது இங்கு தண்ணுமை என்னும் இசைக்கருவி இசைக்கப்படுவதை,

"பூக்கோள் இன்று என்று அறையும்
மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே?"[14]

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. இதன் மூலம் தண்ணுமையின் பயன்பாட்டைப் பற்றி அறியமுடிகிறது.

தடாரி

தடாரி என்பதும் ஒருவகை தோலினால் செய்யப்பட்ட இசைக் கருவியாகும். இதனை கிணைப்பறை அல்லது உடுக்கை என்னும் பெயர்களாலும் அழைப்பர். கரிகால் பெருவளத்தானிடம் பரிசில் வாங்கச்சென்ற பொருநர்கள் தங்கள் பசிநீங்கும் வண்ணம் சிறந்த உணவு உண்டபின்பு வெள்ளி முளைத்த விடியற் காலையில் தங்கள் கையில் கொண்டுள்ள கிணைப் பறையை இரட்டைத் தாளத்திற்குஏற்ப இசைத்துப் பாடுங் காட்சி பின்வரும் பாடலின் மூலம் அறியப்படுகின்றது.

"கைக்கசடு இருந்த என்கண் அகன்தடாரி
இருசீர்ப் பாணிக்கு ஏற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்இருள் விடியல்
ஒன்று யான் பெட்டா அளவையின்"[15]

அதாவது, கண் அகன்ற உடுக்கையாகிய தடாரியை இரட்டைத் தாளத்தில் இசைத்துப் பரிசில்பெற்ற செய்தியை இக்காட்சிப் புலப்படுத்துகிறது.

துளைக் கருவி

துளைக் கருவிகள் இயற்கையே நமக்காகப் படைத்த ஒரு தொன்மையான இசைக்கருவியாகும். இவற்றை உருவாக்க சரியான அளவில் வளர்ந்த மூங்கிலைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பக்கவாட்டுச் செதில் நீக்கி, தகுந்த அளவிலான துளைகளைப் பதிக்க வேண்டும். துளைக் கருவிகள் வாசிக்கும்போது மூச்சினையடக்கி வாசிப்பதால் இது நுரையீரலுக்கு சிறந்த மூச்சுப் பயிற்சியாகவும் விளங்குகிறது.

துளைக் கருவிகளில் குழல், நாதஸ்வரம், கிளாரினெட் என்பவையே இன்றைய மக்களால் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், சங்க மாந்தர் புல்லாங் குழலினையே அதிகம் பயன்படுத்தியுள்ளனர். குழலின் இனிமையை உணர்ந்த வள்ளுவரும்,

"குழல் இனிது யாழ் இனிது"[16]

என்கிறார். மேலும், மிஞிறு வண்டுகளின் ஓசையானது குழலினைப்போன்று இனிமையுடையது என்பதை,

"நரம்பின் தீம்குரல் நிறுக்கும் குழல் போல்
இரங்கு இசை மிஞிறோடு"[17]

எனக் கலித்தொகை உணர்த்துகிறது.

புல்லாங்குழல்

புல்லாங்குழல் மிகவும் தொன்மையான இயற்கையே கொடையாகக்கொடுத்த இசைக் கருவியாகும். இது மூங்கிலால் செய்யப்பட்ட இசைக் கருவியாகும். முல்லை நிலத்து மக்களே இவற்றை முதலில் கண்டறிந்ததாகக் கூறுவர். நெடிது வளர்ந்திருக்கும் மூங்கில் மரத்தில் வண்டு துளைத்துச் சென்ற ஒரு துளையில் காற்று சென்று வருவது இனிய ஓசையை எழுப்புவதைக் கண்ட மக்கள் அதனை இன்று ஒரு இசைக் கருவியாகவே மாற்றி வைத்துள்ளனர். இக்கருவியே புல்லாங்குழல் ஆகும். இதனை,

"ஆடு அமைக்குயின்ற அவிர் துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆக"[18]

எனும் அகநானூறு பாடல்மூலம் அறியலாம். இதன் மூலம் இயற்கையாகவே நீண்டு வளர்ந்துள்ள மூங்கில் மரத்தில் வண்டுகளால் ஏற்பட்ட துளைகளில் காற்று செல்லும்போது அது இனிய ஓசையை ஏற்படுத்துகிறது என்பதை உணரலாம்.

"ஆம்பற்குழலாற்பயிரெம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச்செய்தேய்குறி"[19]

எனும் கலித்தொகைப் பாடல் மூலமாக மூங்கில் மரங்களைக்கொண்டு குழல் தயாரிக்கப்பட்டதை அறியலாம்.

சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவையில் கொன்றைக்குழல், ஆம்பர்; குழல், முல்லைக் குழல் என மூவகைக் குழல்களைப் பற்றிக் கூறுகிறது. புல்லாங்குழல் இறைவனால் வாசிக்கப்பட்ட இசைக் கருவியாகும். கிருஷ்ண அவதாரத்தில் திருமால் புல்லாங்குழல் வாசித்தபடி இருப்பார். இருப்பினும் முதன் முதலில் புல்லாங் குழலை வாசித்தவர் முருகப் பெருமான் என்பர். இதனை,

"குழலன்கோட்டன்குறும்பல்இயத்தன்"[20]

எனும் பாடல் வரிகளால் அறியலாம். இதன் மூலம் முருகப் பெருமான் புல்லாங் குழலினை ஊதிக்கொண்டு குன்றின்மீது ஏறி விளையாடுவதை திருமுருகாற்றுப் படை புலப்படுத்துகிறது.

புல்லாங்குழல் அனைத்துத் தரப்பு சமுதாய மக்களுக்கும் எளிமையாகக் கிடைக்கக்கூடிய இசைக்கருவியாகும். இதில் மொத்தம் 9 துளைகள் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். இதனுடைய நீளம் 15 அங்குலமும், சுற்றளவு 3 அங்குலமும் கொண்டு புல்லாங்குழல் உருவாக்கப்படுகிறது. இதன் முதல் துளைக்கு முத்திரை அல்லது முத்திரைத்துளை என்று பெயர். இதன் அனைத்து துளைகளும் ஒரே அளவிலான இடைவெளியில் இருக்கும். ஆனால், முதல் துளை மட்டும் மற்ற துளைகளை விடவும் சற்று அதிக இடைவெளிவிட்டு இருக்கும். இந்த இடைவெளி வாயினால் காற்றினைஊதி இசையொலியினை எழுப்புவதற்காக வைக்கப்பட்டுள்ளது.

புல்லாங் குழலினை வாசிக்கும்போது விரல்களால் அதன் துளைகளை மூடித் திறக்கவேண்டும். இசையின் ஏழு சுரங்களுக்கு ஏற்ப புல்லாங்குழலின் ஏழு துளைகளும் இசை எழுப்புகின்றன. இதன் மூலமே காற்று உள்ளே நுழைந்து இனிய இசையைத் தோற்றுவிக்கிறது. புல்லாங் குழலின் வலது பக்கம் இருக்கும் திறந்த துளைக்கு வளைவாய் என்று பெயர். இது வளையலைப்போல வட்ட வடிவமாக இருக்கும்.

நரம்புக் கருவி

நரம்புக் கருவியைத் தந்தி வாத்தியம் என்று கூறுவர். யாழ், வீணை, தம்புரா போன்ற இசைக் கருவிகளை நரம்புக் கருவிகள் என்பர். இவ்வகைக் கருவிகளின் இரு முனைகளிலும் நரம்புகள் கொண்டு இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். இந்நரம்புகளை மீட்டும்போது இனிய இசையானது உருவாகிறது. நரம்புக் கருவிகளை,

தம்புரா- சுரதி அல்லது தாள உபகரணமாகப் பயன்படுபவை,

யாழ்- ஒரு தந்தி ஒரு சுரம் மட்டும் இசைக்கப் பயன்படுபவை,

வீணை- ஒரே தந்தியில் பல சுரங்கள் இசைக்கப்படுபவை

என மூவகையாகக் கூறுவர்.

யாழ்

புராண காலம்தொட்டே மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் இசைக் கருவியாக யாழ் இருந்துவருகிறது. யாழ் என்பதற்கு நரம்புகளால் யாக்கப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்று பொருள். தமிழர்களால் முதல்முதலில் இசைக்கப்பட்ட இசைக்கருவி யாழ் ஆகும்.

யாழில் கட்டப்பட்டுள்ள நரம்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப யாழினை,

- பேரியாழ் - 21 நரம்புகள்,
- சீறியாழ் - 9 நரம்புகள்,
- மகரயாழ் - 17 (அ) 19 நரம்புகள்,
- சகோடயாழ் - 14 (அ) 16 நரம்புகள்,
- செங்கோட்டுயாழ் - 7 நரம்புகள்

எனப் பல்வேறு வகைகளாகப் பிரிப்பர்.

யாழானது 1000 நரம்புகள்வரை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கி. பி 9 –ம் நூற்றாண்டு வரையிலும் பல்வேறு வடிவங்களில் வளர்ச்சி பெற்று வந்த யாழானது ஓரிரு வேறுபாடுகளுடன் நீண்டு நின்று வீணை என்னும் பெயரில் வழங்கப்பட்டது. இதனை,

"தத்தையொடுவீணைமனர்தாம்பொருதுதோற்ப"[21]

என்று சீவகசிந்தாமணி கூறுகிறது. அதாவது, தத்தையோடு யாழ் இசைக்கும் போட்டியில் கலந்துகொண்ட மன்னர்கள் தத்தையிடம் தோல்வியுற்றனர் என்பதே இதன் பொருளாகும். இதன் மூலம் யாழின் வளர்ச்சிநிலையே வீணை என்பது தெளிவாகிறது. மேலும், யாழ் என்பது பாணர்கள் பயன்படுத்திய இசைக் கருவியாகும். இதனை,

"ஒரு திறம், பாணர் வண்டின் இமிரிசை எழ"[22]

எனும் பரிபாடல் பாடல் வரிகள் மூலம் அறியலாம். சங்க மக்களிடையே பெரும்புகழ் பெற்றிருந்த யாழானது பிற்காலத்தில், சரியான பராமரிப்போர் இன்றி பயன்பாட்டில் குறைந்து பின்னர் மறைந்து போனது.

வீணை

இசைக் கருவிகளின் அரசி எனப் போற்றப்படும் கருவி வீணையாகும். கல்விக் கடவுளாம் சரஸ்வதி தேவியின் கரங்களில் அழகுற அமைந்திருக்கும் இசைக்கருவி வீணையே. சங்க மக்களால் அதிகம் பயன் படுத்தப்பட்ட துயாழாக இருப்பினும் யாழின் மறைவிற்குப் பின்பு மக்களால் அதிகம் விரும்பப்பட்டது வீணையே ஆகும். உருத்திர வீணை, விசித்திர வீணை, நவசித்திர வீணை, சாத்வீக வீணை, அன்ச வீணை எனப் பல்வேறு வகையிலான வீணைகள் பயன்பாட்டில் உள்ளன. வீணையின் தற்போதைய வடிவத்தைப் பயன்பாட்டில் கொண்டுவந்தவர், கி.பி 17ம் நூற்றாண்டில் தஞ்சையை அரசாண்ட நாயக்க மன்னர் இரகுநாத நாயக்கர் ஆவார்.

எனவே, வீணைக்கு இரகுநாத வீணை என்றும், தஞ்சை வீணை என்றும் சிறப்புப் பெயர்கள் உண்டு.

பொதுவாக வீணைகள் பலா மரத்தினைக்கொண்டு செய்யப்படுகிறது. இதுகுடம், மேற்பலகை, தண்டு, சுரைக்காய், மாடச் சட்டம், பிரடைகள், யாழிமுகம், மேளச்சட்டம், மெழுகுச் சட்டம், 24 மெட்டுக்கள், குதிரைகள், லங்கர், நாகபாசம் என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளது. வலது கையின் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் வீணைக்கம் பிகளை மீட்டுவதற்கும், இடது கையின் ஆள்காட்டி விரலும், நடு விரலும் இசைப் பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. வீணையின் தாள, ஸ்ருதித் தந்திகளை மீட்ட வலது கையின் சுண்டு விரல் பயன்படுகிறது. சிலர் வீணைக் கம்பிகளைமீட்ட நெளி எனும் சுற்றுக் கம்பிகளை விரல்களில் அணிவர்.

யாழ் மற்றும் வீணையின் பயன்பாடானது மாணிக்கவாசகர் காலத்திலும் இருந்துள்ளது. இதனை,

"இன்னிசைவீணையர்யாழினர்ஒருபால்"[23]

என்ற திருப்பள்ளியெழுச்சிப் பாடலின் மூலமாக அறியலாம். திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள இறைவனைச் சுற்றி வீணை வாசிப்போரும், யாழ் வாசிப்போரும் மகிழ்ந்திருக்கும் திறத்தை மாணிக்கவாசகர் இப்பாடல் வரிகளில் எடுத்தியம்புகிறார்.

கஞ்சக் கருவிகள்

கஞ்சம் என்பதற்கு வெண்கலம் என்று பொருள். தூய வெண்கலத்தைக்கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களைக்கொண்டு இசை உருவாக்கும் கருவிகள் கஞ்சகக்கருவிகள் ஆகும். வெண்கலம் மட்டுமின்றி ஐம்பொன்னினைக் கொண்டும் கஞ்சக்கருவிகள் செய்யப்படுகின்றன. தாளம், சேகண்டி, கைமணி, ஜலதரங்கம் போன்றவை மக்களால் அதிகம் விரும்பப்படும் கஞ்சக் கருவிகள் ஆகும். இவை மட்டுமின்றி கைத்தாளம், பிரும்மதாளம், எலத்தாளம், குழித்தாளம், சல்லரி போன்ற கஞ்சக் கருவிகளும் பயன்பாட்டில் உள்ளன.

சேகண்டி

சேகண்டி என்னும் இசைக்கருவி கஞ்சக் கருவிகளில் முதன்மையானதாக உள்ளது. இது சேமக்கலம், சவுண்டி, செகண்டி, செயகண்டி, செயகண்டிகை எனும் பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

தேக்கு மரக் குச்சியினைக்கொண்டு சேகண்டி ஒலியெழுப்பப்படுகிறது. தேக்கு மரக்குச்சியைக் கொண்டு, வெண்கல சேகண்டிமேல் அதிக விசைகொண்டு அடிக்கும்போது ஏற்படும் அசைவினால் காற்றிலுள்ள அணுக்களில் அதிர்வுகள் ஏற்பட்டு அங்கு ஒலி உண்டாகிறது. மேலும், இந்த சேகண்டி சிவபெருமானுக்குரிய கருவியாகும். சிவன் கோயில்களில் இறைவன் புறப்பாட்டின்போது இந்த சேகண்டி இசைக்கப்படுகிறது. இந்த கருவி காண்பதற்கு சோமன் எனும் பெயர்கொண்ட நிலவினைப்போல வட்ட வடிவமாக இருப்பதால் இக்கருவிக்கும் சேகண்டி எனும் பெயர் வந்ததாகக் கூறுவர்.

ஜலதரங்கம்

ஜலதரங்கம் எனப்படுவது இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஒரு இசைக்கருவியாகும். நீரால் நிரப்பப்பட்ட கிண்ணங்களைக் குச்சியினால் தட்டி ஒலியெழுப்பும் இசைக்கருவியே ஜலதரங்கம் எனப்படும். இதனை நீரலை அல்லது நீர்க்கிண்ண இசை எனத் தமிழில் கூறுவர். உதக வாக்கியம் என்றும் இது அழைக்கப்படுகிறது. பண்டைக் காலத்தில் ஜலதரங்கம் கொண்டு இசைக் கச்சேரிகளும் நடத்தப்பட்டுள்ளன. வயலின் மற்றும் மிருதங்கம் இதற்குத் துணைக்கருவிகளாகப் பயன் படுத்தப்படுகின்றன. பண்டைய மக்கள் ஜலதரங்கத்திற்கு வெண்கலக் கிண்ணங்களைப் பயன்படுத்தினர். ஆனால், இன்று பீங்கான் கோப்பைகள் பயன்படுத்தப்படுகின்றன. நீர் நிறைந்த கிண்ணங்களை தன் முன்னால் அரை வட்டக் கோளவடிவில் வைத்துக் கொள்வர். இவ்வாறு 16 கிண்ணங்களில் இடமிருந்து வலமாகக் கோப்பைகளில் நீரின் அளவு குறைந்து கொண்டும், சுருதி உயர்ந்து கொண்டும் வரும். இராகத்திற்கு ஏற்றவாறு கோப்பைகளில் உள்ள நீரின் அளவு வேறுபடும். இசைக்கும்போது அவ்வப்போது கோப்பைகளில் உள்ள நீரின் அளவை மாற்றிக்கொண்டே இருப்பர். வேண்டாத கோப்பைகளை வெளியே நகர்த்தி விட்டவாறு வாசிப்பர். காலியாக உள்ள கோப்பைகள் தரும் சத்தமும், நீர் உள்ள கோப்பைகளின் சத்தமும் ஒன்றுக்கொன்று வேறுபடும். இதற்குக் காரணம், கோப்பைகளில் உள்ள வெற்றிடமே. கோப்பையில் உள்ள வெற்றிடப் பகுதியே அதில் எழும் ஓசைக்குக் காரணம். இது ஐடியோ போனிக் வகையில் இயங்குகிறது.

முடிவுரை

இசை என்பது மனித மனங்களை ஒருமுகப்படுத்தி அமைதியடையச் செய்யும் அருமருந்தாக விளங்குகிறது. சங்க மாந்தர்கள் தங்கள் பொழுதுபோக்கிற்காக கேட்டு மகிழ்ந்த இசைக் கருவிகளில்கூட நுட்பமாக நுண்ணிய அளவிலான அறிவியல் தொழில் நுட்பத்தினைப் புகுத்தியுள்ளார். மேலும், இசைக் கருவிகளைத் தயாரிக்கையில் அதில் இறை வணக்கம், மங்கல நிகழ்வு, திருமணம், இறப்பு என ஒவ்வொரு இசைக் கருவியையும் ஒவ்வொரு நிகழ்விற்கானதாக தனித்தன்மை கொண்டதாக உருவாக்கியுள்ளனர். அறிஞர்கள் பதப்படுத்துதல் எனும் முறையைக் கண்டறிந்து கூறும் முன்னரே தோலினைப் பதப்படுத்தி இசைக்கருவிகளை செய்து வைத்த சங்க மாந்தர்களின் அறிவியல் அறிவை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

அடிக்குறிப்பு

1. தமிழர் வளர்த்த அழகுகலைகள், பக். 150.
2. காலம் தோறும் தமிழர் கலைகள், பக். 13.
3. தமிழர் வளர்த்த அழகு கலைகள், பக். 77.
4. தமிழர் சார்பு, பக். 215.
5. தொல்.சொல், உரியியல், நூ. எண்- 309.
6. தொல்.பொருள், செய்யுளியல், நூ. எண் -319.
7. சங்ககால வாழ்வியல், பக். 457.
8. பரிபாடல், பா.எண்- 12:40-42.
9. தொல்.பொருள், அகத்திணையியல்,நூ.எ- 20.
10. மலைபடுகடாம், வ: 3-13.
11. தமிழ் இசை இலக்கிய வரலாறு, பக். 62.
12. காலம்தோறும் தமிழர் கலைகள், பக். 15.
13. புறநானூறு, பா-348.
14. மேலது, பா-289.
15. பொருநராற்றுப்படை, வ: 70-73.
16. குறள் - 66.
17. கலித்தொகை, பா.எண் - 33:21-22.
18. அகநானூறு, பா-82.
19. கலித்தொகை, பா.எண்-108:63.
20. திருமுருகாற்றுப்படை, வ-209.
21. சீவகசிந்தாமணி, பா.எண்-844.
22. பரிபாடல், பா.எண்-17:9.
23. திருப்பள்ளியெழுச்சி, பா.எண் - 4:1.

துணைநூற்பட்டியல்

அருணாச்சலம், மா. தமிழ் இசை இலக்கிய வரலாறு, கடவு பதிப்பகம், மதுரை, 2009.

ஆசிரியர் குழு, திருத்தக்கத் தேவரின் சீவகசிந்தாமணி மூலமும் உரையும், சென்னை, 2020.

சுப்ரமணியன், பா. பரிபாடல் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

சுப்ரமணியன், முனைவர். ந. சங்ககால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2010.

சேனாவரையர் உரை, தொல்காப்பியம், சொல்லதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2017.

திருஞானசம்பந்தன், ச.தொல்காப்பியம், பொருளதிகாரம், மூலமும் உரையும், கதிர்பதிப்பகம், திருவையாறு, 2020.

பரிமேலழகர் உரை, திருக்குறள், நந்தினி பதிப்பகம், சென்னை, 2007.

பாக்யமேரி, முனைவர். எஃப். காலம்தோறும் தமிழர்கலைகள், அறிவு பதிப்பகம், சென்னை, 2008.

பாலசுப்ரமணியன், கே. வி. புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

மாணிக்கவாசகர், திருப்பள்ளியெளுச்சி, அருள்மிகு அம்மன் பதிப்பகம், சென்னை, 2017.

மாணிக்கவாசகன், பத்துப்பாட்டு, மூலம் விளக்கவுரையுடன், உமா பதிப்பகம், சென்னை, 2010.

வித்தியானந்தன், சு. தமிழர் சால்பு, குமரன் புக் ஹவுஸ், சென்னை, 2014.

விஸ்வநாதன், கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

வேங்கடசாமி, மயிலை. சீனி. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பாம்பன் எண்டர் பிரைசஸ், சென்னை, 2008.

ஜெயபால், ர. அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை, 2004.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.